*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 102/2019***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திருமதி.ஜெயசெல்வி க/பெ. சேகர்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.06.2026.**

துவக்க நேரம் 12.26 A.N

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர், அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.01.2019 அன்று அதிகாலை 10.00 மணியளவில் நானும், கெங்கவல்லி அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை மருத்துவராக பணிபுரிந்த வந்த தங்கத்தாய் என்பவரும் மற்றும் மருந்தாளுனர் தில்சாத்பேகம் மற்றும் அலுவலக பணியாளர் சிவஅங்கமுத்து ஆகியோர்கள் அடங்கிய மருத்துவக்குழு, பெத்தநாய்க்கன்பாளையம் வட்டம் மற்றும் விலாம்பட்டி கிராமத்தில் உள்ள பொன்னுசாமி மகன் மணிகண்டன், கடந்த 20.10.2018ம் தேதியில் சுகாதார சேவை இணை இயக்குனர் அவர்களுக்கு, எதிரி போலி மருத்துவம் பார்ப்பது குறித்து செய்த புகாரின் பேரில், எங்களது சுகாதார சேவை இணை இயக்குனர் அவர்களின் உத்தரவின் பேரில் பெறப்பட்ட ஆணையின்படி, கருமந்துறை பஸ்நிலையம் அருகில் 100 மீ தொலைவில் அமைந்திருந்த ஒரு வீட்டில் ஆய்வு மேற்கொண்டோம்.

2) மேற்படி ஆய்வில் அந்த இடத்தில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக சில நபர்கள் காத்திருந்தனர், மேலும் அந்த இடத்தில் இருந்த உமா மகேஷ்வரி என்பவர் சேலம் சண்முகா மருத்துவமனையில் ANM Course படித்துவிட்டு, அங்கேயே வேலையும் பார்த்துக்கொண்டு நாங்கள் ஆய்வு செய்த இடத்திலும் மருத்துவம் பார்த்து வந்ததாக எங்களிடம் சொன்னார்.

3) நாங்கள் மேற்கொண்ட ஆய்வில் அந்த இடத்திலிருந்து 26 வகையான மருந்துகள் எங்களால் கைப்பற்றப்பட்டது. மேற்கண்டவாறு உரிய மருத்துவ படிப்பு இல்லாமல் ஆஜர் எதிரி உமாமகேஸ்வரி மருத்துவம் பார்த்தது குறித்து கருமந்துறை காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். பின்பு கைப்பற்றிய மருந்துகளை, நாங்கள் கருமந்துறை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). மேற்படி எங்களால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் பின்வருமாறு அரசு தரப்பு சான்று பொருளாக வரிசைப்படுத்தப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| 1. | Ferikind – 2 amp | அ.த.சா.பொ.1 |
| 2. | Dispo Van – 100 Nos | அ.த.சா.பொ.2 |
| 3. | Alfakim – 2 | அ.த.சா.பொ.3 |
| 4. | Pentowok IV – 1 | அ.த.சா.பொ.4 |
| 5. | Deriphylline – 2 | அ.த.சா.பொ.5 |
| 6. | Avil – 4 | அ.த.சா.பொ.6 |
| 7. | Leoleavgo – 1 | அ.த.சா.பொ.7 |
| 8. | Calcium Gluconate – 1 | அ.த.சா.பொ.8 |
| 9. | Stemetil – 10 | அ.த.சா.பொ.9 |
| 10. | Scissor – 1 | அ.த.சா.பொ.10 |
| 11. | Blade – 1 | அ.த.சா.பொ.11 |
| 12. | Plastic Box green colour –1 (Dressing Box) | அ.த.சா.பொ.12 |
| 13. | Argione – 6 | அ.த.சா.பொ.13 |
| 14. | Letrozen – 1 Box (2.5 mg 10x10 Tablets) | அ.த.சா.பொ.14 |
| 15. | Povikem Partial buffle | அ.த.சா.பொ.15 |
| 16. | Povi Max Sterile – 1 | அ.த.சா.பொ.16 |
| 17. | Sodium Chloride IV – 1 | அ.த.சா.பொ.17 |
| 18. | Hydrogen Peroxide 100 ml –1 | அ.த.சா.பொ.18 |
| 19. | Scalp veinset – 1 | அ.த.சா.பொ.19 |
| 20. | Surgi Care Gloves 6.5" – 6 Par | அ.த.சா.பொ.20 |
| 21. | Cotton சுமார் 2 gms | அ.த.சா.பொ.21 |
| 22. | Plastic Box (Suture Needle Box) ஊசி – 3 | அ.த.சா.பொ.22 |
| 23. | Sanspos | அ.த.சா.பொ.23 |

| | | |
|---|---|---|
| 24. | Nebulizer mask – 1 | அ.த.சா.பொ.24 |
| 25. | Infra Red lamp – 1 (NISCO) | அ.த.சா.பொ.25 |
| 26. | Enema can – 1 (maruti) | அ.த.சா.பொ.26 |

**(மேற்படி மருந்து பொருட்கள் அ.த.சா.பொ.1 முதல் அ.த.சா.பொ.26 ஆக குறியீடு செய்யப்படுகின்றன)**. போலிசார், இவ்வழக்கு குறித்து என்னிடம் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான், புகாரை கொடுக்கும்பொழுது எந்த மருத்துவமனையில் பணிபுரிந்தேன் என்றால் பெத்தநாய்க்கன்பாளையம் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்தேன். நான், புகாரை கொடுக்கும்பொழுது கெங்கவல்லி அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவர் பணியில் இருந்தாரா என்றால் இருந்தார்.

2) நான், இந்த புகாரை கொடுத்த இடத்தை ஆய்வு செய்வதற்கு முன்பாக கருமந்துறை சுற்றுவட்டார பகுதியில் பலமுறை ஆய்வு மேற்கொண்டுள்ளோமா என்றால் ஆமாம். நான், இந்த வழக்கில் சொல்லக்கூடிய இடத்தை எங்களது இணை இயக்குனரின் உத்தரவின் பேரில் தான் ஆய்வு செய்தோமா என்றால் ஆமாம்.

3) சுகாதார சேவை இணை இயக்குனர் அவர்கள், கெங்கவல்லி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவரைத்தான் வழக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஆய்வு செய்து, அறிக்கை தாக்கல் செய்யச்சொல்லி அறிவிப்பு அனுப்பியிருந்தாரா என்றால் ஆமாம், ஆனால் கருமந்துறை பகுதியானது, பெத்தநாய்க்கன்பாளையம் சுற்றுவட்டார பகுதியில் வருவதால் அந்த இடம் நான் பணிபுரிநத் பெத்தநாய்க்கன்பாளையம் அரசு எல்லைக்குள் வருவதால் என்னை ஆய்வு செய்யச்சொல்லி கெங்கவல்லி, அரசு முதன்மை மருத்துவர் சொன்னதன் பேரில் நானும், அவர்களுடன் சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, வழக்கு சம்பவம் பற்றி கருமந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

4) இணை இயக்குனர், என்னை கருமந்துறை பகுதியை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யச்சொல்லி எனக்கு எதுவும் சுற்றறிக்கை அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். இணை இயக்குனர் அனுப்பிய சுற்றறிக்கை, கெங்கவல்லி அரசு மருத்துவமனைக்கு கடந்த 31.10.2018 ம் தேதியில் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சுற்றறிக்கையில், இந்த அறிவிப்பு கிடைத்து 15

தினங்களுக்குள் கருமந்துறை பகுதியை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்றுதான் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

5) மேற்படி சுற்றறிக்கை கிடைக்கப்பெற்று 2-1/2 மாதங்கள் கழித்துதான் நாங்கள், ஆய்வு செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். என்னுடன், கெங்கவல்லி அரசு தலைமை மருத்துவரும் உடன் வந்தாரா என்றால் ஆமாம். கெங்கவல்லி அரசு தலைமை மருத்துவர் இவ்வழக்கு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

6) நாங்கள் ஆய்வு செய்த வீட்டிற்கு அருகில், கமல் பார்மசி என்ற மருந்துக்கடை இருந்ததா என்றால் ஆமாம். அந்த பார்மசி, எதிரியினது வீட்டின் ஒரு பகுதியில்தான் அமைந்துள்ளதா என்றால் ஆமாம். கருமந்துறை பகுதியில் ஜெயம் மருத்துவமனை என்ற பெயரில் மருத்துவர் பாலசண்முகம் என்பவர் சம்பவயிடத்திற்கு அருகிலேயே மருத்துவமனை நடத்திவருகிறாரா என்றால் ஆமாம். மேலும் சம்பவயிடத்திற்கு அருகில் சித்தா, ஆயுர்வேதா, ஹோமியோதிபதி மருத்துவர்கள் மருத்துவம் பார்த்து வருகிறார்களா என்றால் ஆமாம்.

7) நாங்கள் ஆய்வு செய்த இடத்திற்கு அருகில், 1/2 கி.மீ தொலைவில் கருமந்துறை அரசு மருத்துவமனை உள்ளது என்று சொன்னால் சரிதான். நான், புகாருடன் கருமந்துறை காவல் நிலையத்தில் கொடுத்த மருந்து பொருட்கள் அனைத்தும் எளிதாக அனைத்து மருந்துக்கடைகளிலும் கிடைக்குமா என்றால் கிடைக்கும்.

8) ஒரு ஆம்பிளில் உள்ள மருந்து ஒரு நபருக்குத்தான் செலுத்தமுடியும் என்று சொன்னால் சரிதான். நான், பயன்படுத்திய மருந்து பொருட்களின் கழிவுகளை கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல, M.O.No.15 பாதி பயன்படுத்தப்பட்டு, மீதி பயன்படுத்தப்படாத நிலையில் கைப்பற்றப்பட்டது. M.O.No.15 ல் உள்ள மருந்து எதற்காக பயன்படுத்தலாம் என்றால் டிரஸ்ஸிங் செய்வதற்கு முன்பாக காயத்தை சுத்தம் செய்வதற்காக பயன்படுத்தப்படும் மருந்தாகும்.

9) நான், காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு என்னை போலிசார் மறுபடியும் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த புகாரை கொடுப்பதற்கு முன்பாக செய்த ஆய்வில் கருமந்துறை பகுதியில் நாங்கள் போலி மருத்துவர்கள் யாரையும் கண்டுபிடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு

சம்பவத்திற்கு முன்பாக கருமந்துறை பகுதியில் ஆய்வு செய்தபொழுது உமாமகேஸ்வரி என்பவர், போலி மருத்துவரம் பார்த்ததாக எங்களுக்கு தகவல் எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான்.

10) நான் கொடுத்த புகாரில், எதிரி உமாமகேஸ்வரியின் பெயரானது இடைச்செருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், புகாரில் உமா என்று சரியாக எழுதப்பட்டு, பின்பு உமா மகேஸ்வரி என்பது அவர் பெயர் என்பதை தெரிந்துகொண்டு உமா மகேஸ்வரி என்பதை மட்டும் இடைச்செருகலாக சேர்த்துள்ளோம்.

11) சம்பவயிடத்தில் சில நபர்கள் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில், அந்த நபர்களின் பெயர்களோ, அவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்ற விவரமோ எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் ஆய்வு செய்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் நிறைய கடைகள், வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

12) ஆய்வு செய்ததாக சொல்லும் இடத்திற்கு அருகில் இருந்த வீடுகளில் வசித்த நபர்கள், நாங்கள் ஆய்வு செய்த இடத்தில் யாரும் போலி மருத்துவம் பார்த்ததாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

13) நான் சொன்னவாறு, சொன்ன தேதி மற்றும் நேரத்தில் எங்கும் ஆய்விற்கு செல்லவில்லை என்று சொன்னாலும், எந்த மருந்து பொருட்களையும் கைப்பற்றவில்லை என்று சொன்னாலும், எதிரியின் மீது பெறப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில், எங்களது உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு வகையில் புகாருக்கேற்றவாறு நாங்களே மருந்து பொருட்களை தயார் செய்து வைத்து, எதிரியின் மீது பொய் புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.14 A.N

ஒம்/–C.உதயசுந்தரம்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.